பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

25 10 2024 **FRIDAY** **7.15 PM**

ஆகாஷவாணி
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தொழில்நுட்பத்தின் வளர்ச்சியையும், நவீன அறிவியலையும் மாணவர்கள் அறிந்துகொள்வது அவசியம் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

2. இந்தியா – ஜெர்மன் இடையே பசுமை ஹைட்ரஜன், புதுமை கண்டுபிடிப்புகள், தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.

3. அரசு அலுவலர்கள் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை திறம்பட பயன்படுத்த வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. ஜார்கண்ட் சட்டப்பேரவை முதல் கட்டத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்றுடன் நிறைவடைந்தது.

5. இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டநேர இறுதியில் நியூசிலாந்து இரண்டாவது இன்னிங்சில் 5 விக்கெட் இழப்பிற்கு 198 ரன் எடுத்துள்ளது.

<u>*-- இனி விரிவான செய்திகள் ----*</u>

**<<<<<>>>>>**

தொழில்நுட்பத்தின் வளர்ச்சியையும், அதிநவீன அறிவியலையும் மாணவர்கள் அறிந்துகொள்வது அவசியம் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

சத்தீஸ்கர் மாநிலம் ராய்பூரில் உள்ள எயிம்ஸ் நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று பேசிய அவர், வளர்ந்துவரும் தொழில்நுட்பத்தில் பன்னாட்டு நிறுவனங்கள் உலக அளவில் யோசித்து, உள்ளூர் அளவில் தங்களின் திறமைகளை வெளிப்படுத்தி வருவதாக கூறினார்.

உயர்கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்கு இத்தகைய சிந்தனை அவசியமானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொறியாளர்களின் தனித்துவமான திறமைகளால் நாட்டில் லட்சிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

பழங்குடியின மக்களுக்கு குறிப்பாக பின்தங்கிய மக்களுக்கு சேவையாற்ற மாணவர்கள் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் திருமதி திரௌபதி முர்மு கேட்டுக்கொண்டார்.

**<<<<<>>>>>**

பசுமை ஹைட்ரஜன், தொழில்நுட்பம், உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியா - ஜெர்மனி இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

புதுதில்லியில் இன்று இருநாடுகளின் பிரதிநிதிகள் நிலையிலான பேச்சுக்களைத் தொடர்ந்து, பிரதமர் திரு நரேந்திர மோடி, ஜெர்மன் பிரதமர் திரு **Olaf Scholz,** ஆகியோர் முன்னிலையில் இந்த ஒப்பந்தங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

தகவல்களை பாதுகாப்பதில் பரஸ்பர பரிமாற்றம், புதுமை கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

குற்றவியல் தொடர்பான சம்பவங்களில் இருநாடுகளும் சட்டப்பூர்வ உதவிகளை பகிர்ந்துகொள்ளுதல், திறன் மேம்பாடு, தொழிற்கல்வி மற்றும் பயிற்சி ஆகிய துறைகளில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

மேலும், இரு நாடுகளுக்கும் இடையே மூன்று பிரகடனங்களும் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

இதனைத்தொடர்ந்து வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், உக்ரைன் மற்றும் மேற்காசியாவில் நடைபெற்றுவரும் போரை முடிவுக்கு கொண்டுவந்து அமைதியை ஏற்படுத்த இந்தியா தொடர் முயற்சிகளை மேற்கொள்ளும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்த போர் இந்தியாவுக்கும், ஜெர்மனிக்கும் கவலை அளிக்கக்கூடியதாக உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையேயான ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தையும் பிரதமர் திரு நரேந்திர மோடி அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<<>>>>>

உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதில் ஜெர்மன் வர்த்தகத்தின் ஆசிய பசிபிக் மாநாடு முக்கிய பங்கு வகிக்கும் என்று மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இந்த மாநாட்டை தொடங்கிவைத்து பேசிய அவர், உலக அளவில் வளர்ந்துவரும் வர்த்தக நடவடிக்கைகளை அடையாளம் காண்பதிலும், சவால்களை எதிர்கொண்டு சமாளிப்பதிலும் இந்த மாநாட்டிற்கு முக்கிய பங்கு உள்ளதாக தெரிவித்தார்.

தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கு ஊக்கம் அளிப்பதுடன், எதிர்காலத்தில் தொழில்துறை தொடர்பான கொள்கைகளை வடிவமைப்பதிலும் இந்த மாநாடு அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவும், ஜெர்மனியும் ராஜ்ய ரீதியான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதன் மூலம், இருநாடுகளின் பொருளாதாரம் வளர்ச்சியடைய வழிவகுக்கும் என்றும் திரு பியூஷ் கோயல் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<>>>>>

நாட்டில் ஐந்து எயிம்ஸ் மருத்துவமனைகள் மட்டுமே இருந்த நிலையில், தற்போது அதன் எண்ணிக்கை 22-ஆக அதிகரித்துள்ளது என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக கல்லூரி பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று பேசிய அவர், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் எயிம்ஸ் மருத்துவமனைகள் அமைக்கப்பட்டிருப்பதன் மூலம், அனைத்துத்தரப்பினருக்கும் தரமான சுகாதார சிகிச்சை கிடைக்க வழிவகை செய்யப்பட்டிருப்பதாக கூறினார்.

நாட்டின் சுகாதார கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் திரு ஜெ பி நட்டா தெரிவித்தார்.

<<<<<>>>>>

அரசு துறைகளின் செயல்பாட்டை விரைவுப்படுத்துவதற்கு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை அரசு அலுவலர்கள் பயன்படுத்த வேண்டும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் கர்மயோகி தேசிய கற்றல் வார நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அவர், தகவல் திரட்டுதல், முடிவுகளை மேற்கொள்ளுதல் போன்ற பல்வேறு முயற்சிகளுக்கு செயற்கை தொழில்நுட்பத்தை திறம்பட பயன்படுத்த வேண்டும் என்று கூறினார்.

இதன்மூலம், பல்வேறு துறைகளிலும் அரசு நிர்வாகப்பணிகள் ஊக்கம் அடைந்து செயல்திறன் அதிகரிப்பதுடன் அலுவலர்களின் பணிச்சுமையும் குறையும் என்று அவர் தெரிவித்தார்.

கர்மயோகி நடைமுறையை சிறப்பாக கையாண்ட ஊழியர்களுக்கு திரு எல். முருகன் சான்றிதழ்கள் வழங்கி பாராட்டினார்.

<<<<<>>>>>

ஜார்கண்ட் சட்டப்பேரவை முதல் கட்டத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று மாலையுடன் நிறைவடைந்தது.

43 தொகுதிகளில் அடுத்த மாதம் 13-ஆம்தேதி முதல்கட்டத் தேர்தல் நடைபெறவுள்ளது.

முன்னாள் முதலமைச்சர் திரு சம்பை சோரன், **Saraikela** தொகுதியில் போட்டியிட மனு தாக்கல் செய்தார்.

இதேபோல், ஜார்கண்ட் முக்திமோர்ச்சா கட்சியை சேர்ந்த பலரும் இன்று வேட்புமனு தாக்கல் செய்தனர்.

வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை வரும் திங்கட்கிழமை நடைபெறும்.

மனுக்களை திரும்பப்பெற வரும் 30-ஆம் தேதி கடைசிநாளாகும்.

ஜார்கண்ட் சட்டப்பேரவைக்கு இரண்டாவது மற்றும் இறுதிக்கட்டமாக 38 தொகுதிகளில் அடுத்த மாதம் 20-ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 23-ஆம் தேதி நடைபெறும்.

**<<<<<>>>>>**

காற்று மாசுபாட்டை கட்டுப்படுத்த மாநில அரசுகள் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் சுகாதாரத்துறைக்கு, மத்திய சுகாதார சேவைகள் தலைமை இயக்குனர் திரு அதுல் கோயல் எழுதியுள்ள கடிதத்தில், காற்று மாசுபடுதல் செயல்பாடுகளை எதிர்கொள்ள உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

காற்றில் மாசு ஏற்படுவதால், சுவாச கோளாறுகள், இதயம் தொடர்பான நோய்கள் போன்ற பாதிப்புகள் அதிகரித்து வருவதை அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக, குழந்தைகள், கர்ப்பிணி பெண்கள், மூத்த குடிமக்கள் பாதிக்கப்படுவதால், மாநில அரசுகள் தேவையான முன்முயற்சிகளை மேற்கொண்டு காற்று மாசுபடுதலை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு அதுல் கோயல் அக்கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

**<<<<<>>>>>**

கேரளாவில் திருவனந்தபுரம் உள்ளிட்ட எட்டு மாவட்டங்களுக்கு கனமழைக்கான ஆரஞ்சு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

திருவனந்தபுரம், கொல்லம், பத்தனம் திட்டா, கோட்டயம், திருச்சூர் உள்ளிட்ட மாவட்டங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதேபோல், லட்சத்தீவின் மூன்று மாவட்டங்களில் கனமழைக்கான மஞ்சள் எச்சரிக்கையும் விடப்பட்டுள்ளது.

கேரளா மற்றும் லட்சத்தீவு கடலோரப்பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மணிக்கு 55 கிலோமீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்றும், மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே, **Dana** புயல் கரையை கடந்த போதிலும், மேற்குவங்க மாநிலத்தில் இன்று காலை முதல் கனமழை பெய்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கனமழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணிகளும், சீரமைப்புப்பணிகளும் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<>>>>>**

ஜம்மு காஷ்மீரில் அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்ய அரசு தேவையான முயற்சிகளை எடுத்து வருவதாக வடக்கு பகுதி ராணுவ கமாண்டர் லெப்டினன்ட் ஜெனரல் சுசீந்திர குமார் தெரிவித்துள்ளார்.

காஷ்மீரில் அண்மை காலமாக அதிகரித்துவரும் தீவிரவாத தாக்குதல்கள் குறித்து ஸ்ரீநகரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தீவிரவாதிகளை தேடும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும், வன்முறையை தடுக்கவும், இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கவும் தேவையான முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

விளையாட்டுகளுக்கு ஊக்கம் அளிப்பதுடன் ஜம்மு காஷ்மீரின் வளமான பாரம்பரியத்தை மீட்டெடுக்க அரசு தேவையான நடவடிக்கைகள் எடுத்து வருவதாகவும், கடந்த ஐந்தாண்டுகளில் 720 தீவிரவாதிகள் கொல்லப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்துபேசும் மன் கி பாத் நிகழ்ச்சி நாளை மறுநாள் அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பாகிறது.

அன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சி 115-ஆவது நிகழ்ச்சியாகும்.

பிரதமரின் இந்த உரை ஆகாஷ்வாணியின் அனைத்து அலைவரிசைகளிலும், தூர்தர்ஷனிலும் ஒலிபரப்பாகும்.

ஆகாஷ்வாணி, தூர்தர்ஷன், பிரதமர்அலுவலகம், தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் அனைத்து யூடியூப் தளங்களிலும் இந்த உரை இடம்பெறும்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

-

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் நியூசிலாந்து இரண்டாவது இன்னிங்சில் 5 விக்கெட் இழப்பிற்கு 198 ரன் எடுத்துள்ளது.

புனேயில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், **Tom Blundell** 30 ரன்னுடனும், **Glenn Phillips** 9 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

முன்னதாக, இந்தியா முதல் இன்னிங்சில் 156 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக ஜடேஜா 38 ரன் எடுத்தார்.

நியூசிலாந்து முதல் இன்னிங்சில் 259 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

-----------------

வளரும் அணிகளுக்கான ஆசியகோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா “ஏ” – ஆப்கானிஸ்தான் “ஏ”அணிகளுக்கு இடையேயான அரையிறுதி ஆட்டம் இன்று நடைபெறுகிறது.

ஓமனில் நடைபெறவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற ஆப்கானிஸ்தான் “ஏ” முதலில் பேட் செய்ய தீர்மானித்துள்ளது.

17 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசியக்கோப்பை தகுதிச்சுற்று கால்பந்து போட்டியில், இந்தியா 1-0 என்ற கோல் கணக்கில் துர்க்மெனிஸ்தானை வென்றது.

தாய்லாந்தில் நடைபெற்ற இப்போட்டியில், இந்தியாவின் ரிஷி சிங் ஒரு கோல் அடித்தார்.

-----------------

செஸ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியாவின் அர்ஜுன் எரிகேசி, 2 ஆயிரத்து 800 புள்ளிகளை கடந்து வரலாற்று சாதனை படைத்துள்ளார். விஸ்வநாதன் ஆனந்துக்கு பிறகு இந்த சாதனையை படைக்கும் பெருமையை அவர் பெற்றுள்ளார்.

-------

**Dutch** ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 13-21, 21-11, 21-12 என்ற செட் கணக்கில், நெதர்லாந்தின் **Dennis Koppen**-ஐ வென்றார்.

மற்றொரு போட்டியில் சங்கர் முத்துசாமி 21-17, 20-22, 21-9 என்ற செட் கணக்கில், டென்மார்க்கின் **Jeppe Bruun**–ஐ வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு தகுதி பெற்றார்.

-----------

மலேசியாவில் நடைபெற்றுவரும் ஜோஹர் கோப்பை ஜூனியர் ஹாக்கிப்போட்டியில் இந்தியா – நியூசிலாந்து இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

இரு அணிகளும் தலா மூன்று கோல் போட்டன.

<<<<<END>>>>>